தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 7, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996, ஆகஸ்ட் 22, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

"உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்"

வந்துள்ள துன்பத்தைப் போக்கி, மேலும் துன்பம் நேராமல் காக்கவல்ல பெரியோர்களைத் துணையாகக் கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 204, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

204—

வேதாரண்யம் பகுதியில் தொழிற்சாலை அமைத்தல்

***1153—திரு. எஸ்.கே.வேதரத்தினம் :**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் பெருமளவில் உற்பத்தியாகும் உப்பை மூலப் பொருளாகக் கொண்டு தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

D
V3, 31/VIII/96 N97.13.3

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 22

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வேதாரண்யத்தில் உப்பை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலையை அமைக்கும் சாத்தியக்கூறுகளைப் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. எஸ். கே. வேதரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் 1989-91-ஆம் ஆண்டில் நடைபெற்ற கழக ஆட்சியிலே உப்பை மூலப்பொருள்களாகக் கொண்டு ரூ. 110 கோடி செலவில் சோடா தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்கான இடம்கூட கோவில்பத்து என்ற கிராமத்திலே தெரிவு செய்யப்பட்டது. ஆனால், பின்னால் வந்த ஆட்சியாளர்கள் அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார்கள். அதனால், பல்லாயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்களால் கிடப்பில் போடப்பட்டவை அனைத்தின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். கே. வேதரத்தினம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஆரம்பிக்கும் அந்தத் தொழிற்சாலைக்கு உப்பு சத்தியாகிரகத் தியாகி சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களுடைய பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் கோரிக்கை வைக்காமலேயே, நிதிநிலை அறிக்கையிலேயே சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்ற கடிதத்தை மத்திய அரசுக்கு இந்த அரசு எழுதியிருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறேன். யாரும் கோரிக்கை வைக்காமலேயே தேசியக் கவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களுடைய பெயரை தலைமைச் செயலக 10 மாடிக் கட்டிடத்திற்கு வைத்ததும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் கோரிக்கை

வைக்காமலேயே கடற்கரைச் சாலைக்கு காமராஜர் சாலை என்று பெயரிட்டதும் இந்த அரசுதான் என்பதை நினைவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விரிக்கின் பெருகும். விரிவஞ்சி விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 205, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

205—

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***681—திரு. செ. இராமலிங்கம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கதிராமங்கலத்தில் உள்ள உதவி பெறும் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக்கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், கதிராமங்கலத்தில் உள்ள உதவி பெறும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நடுநிலைப் பள்ளியில் சுமார் 500 மாணவர்கள் பயிலுகிறார்கள். 20-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு இந்த ஒரு நடுநிலைப் பள்ளிதான் இருக்கிறது. அருகிலே 5 கிலோ மீட்டர் தொலைவில் வேறு உயர்நிலைப் பள்ளிகள் கிடையாது. எனவே, சுயநிதி அடிப்படையிலாவது அங்கு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த அனுமதி தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் உருவாக்க வேண்டுமானால், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமானால், அப்படி உயர்த்துவதற்கு முதலில், அந்தப் பள்ளியை